ப.வெ.அ4/1889/2021

வட்டாட்சியர் அலுவலகம்,
இராஜபாளையம்.
நாள்: 20.11.2021

சுற்றறிக்கை

பொருள்: அடங்கல்- இராஜபாளையம் வட்டம் - விவசாயிகளுக்கு அடங்கல் சான்று வழங்குவது- கிராம நிர்வாக அலுவலர்களுக்கு தெளிவுரை வழங்குவது —— தொடர்பாக

பார்வை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தொலைபேசி செய்தி நாள்:13.11.2021

*****

வருவாய் துறையின் மூலம் வழங்கப்படும் சாகுபடி அடங்கல் சான்றில் பட்டாதாரர் பெயர் மட்டும் குறிப்பிட்டு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வரும் காரணத்தினாலும், விவசாயிகள் குறிப்பிட்ட தேதிக்குள் பயிர் காப்பீடு செய்ய வேண்டியுள்ளதாலும் நிலத்தில் பயிர் சாகுபடி செய்து வரும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் அடங்கல் சான்று வழங்கும் போது கீழ்க்கண்ட குறிப்புகளை பின்பற்றுமாறு அனைத்து கிராம நிர்வாக அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. ஆஜர் பட்டாதாரர் காலமாகிவிட்டால் அவரது அனைத்து ஆண், பெண் வாரிசுகள் பெயர்களை சேர்த்து அடங்கல் சான்று வழங்கலாம்.
2. ஆஜர் பட்டாதாரர் காலமாகிவிட்டால் அவரது அனைத்து ஆண், பெண் வாரிசுகள் நேரடியாக கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்கும் இனங்களில் மட்டும் அவர்கள் குறிப்பிடும் வாரிசுதாரர் பெயரில் அடங்கல் வழங்கலாம்.
3. கூட்டுப்பட்டாவில் உள்ள ஆஜர் பட்டாதாரர்கள் உயிரோடு இருந்தல் நேரடியாக கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்கும் இனங்களில் மட்டும் அவர்கள் குறிப்பிடும் பட்டாதாரர் பெயரில் அவர்களது பங்கினை கணக்கிட்டு முழுமையாகவோ, பகுதியாகவோ அடங்கல் சான்று வழங்கலாம்.
4. கூட்டுப்பட்டாவில் உள்ள ஆஜர் பட்டாதாரர்கள் காலமாகி இருந்தால் அவர்களில் அனைத்து வாரிசுகளும் ரேடியாக கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்கும் இனங்களில் மட்டும் அவர்களது பங்கினை கணக்கிட்டு முழுமையாகவோ, பகுதியாகவோ அடங்கல் சான்று வழங்கலாம்.
5. கிரையம் பெற்று பட்டா மாற்றம் செய்யாத இனங்களில் பட்டாமாற்றம் செய்த பின்னர் அடங்கல் நகல் வழங்கினால் போதுமானது.
6. குத்தகை இனங்களில் மட்டும் ஆஜர் பட்டாதாரர்களும், காலமாகி இருப்பின் வாரிசுதாரர்களும், நேரடியாக கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் ஆஜராகி

Scanned by CamScanner

அவர்களில் அனைத்து வாரிசுகளும் வாக்குமூலம் அளிக்கும் இனங்களில், மட்டும் அவர்கள் குறிப்பிடும் குத்தகைதாரர் பெயரில் அவர்களது பங்கினை கணக்கிட்டு முழுமையாகவோ, பகுதியாகவோ அடங்கல் சான்று வழங்கலாம்

7. மேற்படி ஆஜர் பட்டாதாரர்களோ, அவரது வாரிசுகளோ நேரடியாக கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்க மறுக்கும் அல்லது தவறும் இனங்களில் அடங்கல் அனுபவ சான்று வழங்க தேவையில்லை.
8. பட்டா மாற்றம் செய்ய இயலாத மற்றும் நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ள இனங்களில் அடங்கல் அனுபவ சான்று வழங்க தேவையில்லை.

ஒம்/ஆர். ரெங்கநாதன்(பொறுப்பு)
வருவாய் வட்டாட்சியர்
இராஜபாளையம்.

//உத்தரவுப்படி//

வட்டாட்சியருக்காக
20/11/2021

பெறுநர்

அனைத்து வருவாய் ஆய்வாளர்கள், இராஜபாளையம் வட்டம்
அனைத்து கிராம நிருவாக அலுவலர்கள், இராஜபாளையம் வட்டம்

Scanned by CamScanner